ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2349/22 - 2023 සැප්තැම්බර් මස 13 වැනි බදාදා - 2023.09.13
*2349/22 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25அ மற்றும் 70இ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் நீர்கொழும்பு, பொலவலன, மினுவங்கொடை வீதி 495 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளதும் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய சான்றிதழின் கீழிருந்து, சொல்லப்பட்ட பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டானது பெனட்டிக் XVI கத்தலிக் இன்டர்நெஷனல் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் என கூட்டிணைக்கப்பட்டதுமான, பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2201/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையானது “பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் சொற்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அவற்றுக்குப் பதிலாக “பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் சொற்களை இடுவதன் மூலம் மற்றும் மேற்கூறப்பட்ட பிரிவுகளுக்கேற்ப ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைகள், அறிவிப்பு, ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது ஆவணங்களிலான “பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் ஒவ்வொரு குறிப்பும் “பெனட்டிக் XVI கத்தலிக் இன்டர்நெஷனல் இன்ஸ்ரிரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்” என வாசிக்கப்படுதலும் கட்டமைக்கப்படுதலும் வேண்டும்.*

1A - PG 6485 — 286 (2023/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2201/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் இதன்மேல் விதிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்திற்கமைய இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னதாக சொல்லப்பட்ட பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியுற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் பிரயோகிக்கப்படும் ஏதேனும் தத்துவம் அல்லது நிறைவேற்றப்படும் ஏதேனும் கடமை அல்லது பணியானது, எல்லா நோக்கங்களுக்காகவும் பெனட்டிக் XVI கத்தலிக் இன்டர்நெஷனல் இன்ஸ்ரிரியுற் ஒப் ஹயர் எடியுகேஷனினால் செல்லுபடியான முறையில் பிரயோகிக்கப்படுகின்றது மற்றும் நிறைவேற்றப்படுகின்றது எனக் கருதப்படுதல் வேண்டும்.

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023*, செத்தெம்பர் *08*.

EOG *09-0111*